சென்று இரால் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த கப்பல்களும் கரையோரங்களில் மீன் பிடிக்க ஆரம்பித்தால் கட்டுமரம், சிறு படகு வைத்திருப்பவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். நம்முடைய பகுதியில் அதிகமாக இரால் கிடைக்காத தால் அதிகமாகக் கிடைக்கின்ற விசாகப்பட்டினத்தில் இந்த இரண்டு கப்பல்களையும் வைத்திருக்கிறோம். அங்கே அதிகமான இரால் கிடைத்து, அதனால் நல்ல இலாபம் கிடைப்பதால், மேற்கொண்டும் அதிகமாக 'ட்ராலர்களை' வாங்கும் முயற்சி யில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

சாத்தனூர் அணையில் மீன் விற்பனை.

*வினா எண் 222—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் மீன் வளர்க்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) இதனால் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம்?

(ஈ) உள்ளூரில் மீன் விற்பனை உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்களை தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நேரடியாக வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பு வதில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(ஈ) உண்டு.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, சாத்தனூர் அணையில் கிடைக்கின்ற மீன்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். திருவண்ணாமலைக்கு அருகே கடற் கரையோ, ஆறோ இல்லை. அணையில் கிடைக்கின்ற மீன்களும் வெளி மாநிலங்களுக்கு போய் விடுவதால் அங்கே உள்ள மக்க ளுக்கு மீன் கிடைக்க வழியில்லை. ஆகவே திருவண்ணாமலையில்

1981 பிப்ரவரி 7]

இந்த இலாகாவின் மூலம் ஒரு கடை அமைத்து, உள்ளூர், மக்களுக்கு மீன் கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் சாத்தனூர் அணையில் கிடைக்கின்ற மீன் வகைகள் கட்லா, ரோகு, நீல்பா, கடல்பாசி ஆகியவை. அவற்றை தமிழக மக்கள் விரும்பி சாப்பிடுவதில்லை என்பதாலும், மேற்கு வங்கத்தில் இருப்பவர்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்பதாலும் அங்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்ளூர் மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்றால் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்த பிறகு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். என்னிடம் இருக்கிற குறிப்பில், இதற்காக விடப்படும் டெண்டர் குத்தகை அதிகமாக இருப்பதால் இங்கே இருப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க தயங்குகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற மக்கள் விரும்பி, அதை வாங்கிச் சாப்பிடுவதாக இருந்தால், அவர்களுக்குக் கொடுத்தது போக மீதியை வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த மீன்களையும் உள்ளூர் மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே பிடிக்கின்ற மீன்களில் ஒரு பகுதியை ஒதுக்கி, உள்ளூர் மக்களுக்கு விற்கப்படுமா ? அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதற்காக கல்கத்தாவுக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்படி இல்லாமல் உள்ளூர் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய இந்த இலாகா மூலம் விற்பனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மாதிரி, உள்ளூர் மக்கள் இந்த மீன்களை விரும்பிச் சாப்பிடுவதாக இருந்தால், பிடிக்கின்ற மீன்களில் ஒரு பகுதியை ஒதுக்கி, அங்காடி வைத்து விற்பனை செய்வதற்கும், மீதியை ஏற்றுமதி செய்யவும் ஏற்பாடு செய்யலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் கட்லா மீன்களை இங்கே உள்ள மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஓரளவுக்கு அவர்களுக்கு கட்லா மீனைப்பற்றி தெரியும் என்று கருதுகிறேன். அது மிகவும் ருசியான மீன். அந்த மீனை இங்கே விற்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ? அதைப் போலவே இந்த மீன் விற்பனையின் மூலம் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த மீன் வளர்ச்சிக் கழகம் சாத்தனூர் அணையில் பிடிபடும் மீனை டெண்டர் மூலம் குத்தகைக்கு விடுகிறது. ஆகவே, மீன்களின் விலை சற்று அதிகமாக இருக்கும். விலை உயர்வு காரணமாக தமிழக மக்கள் வாங்கும் ஊக்கம் குறைந்துள்ளது. இந்த மீன்களுக்கு தமிழ்நாட்டைவிட மேற்கு வங்கத்தில் அதிக கிராக்கி இருப்பதால் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டேன்.

[முற்பகல் 9–10]

எந்த வகை மீனில் என்ன ருசி இருக்கும் என்பது தெரியவில்லை. அதனுடைய பெயர்கள் தெரியவில்லை. நமக்கு வைக்கப்படுகின்ற மீன் ருசியாக இருந்தால் சாப்பிடுகிறோம், இல்லையென்றால் ஒதுக்கி விடுகிறோம். ஆகவே எந்தெந்த வகை மீன்களில் என்னென்ன ருசிகள் இருக்கும் என்று தெரியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இங்கே அதைச் சாப்பிடுகின்றவர்கள் இருந்தால் அந்த மீன்களின் ஒரு பகுதியை இங்கேயே விற்பதற்கு முயற்சிகள் செய்யலாம்.

1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. அதற்கடுத்த ஆண்டு 9,04,124 ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. அதற்கடுத்த ஆண்டு 10,25,402 ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. இந்த ஆண்டு அதாவது 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையுள்ள 5 மாத காலத்தில் 5,78,035 ரூபாய் அளவு மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, தற்போது மீன் உணவைச் சைவ உணவாகக் கருதி, மீன் சாப்பிடாதவர்கள் கூட தெரியாத் தனமாகச் சாப்பிடுகிறார்கள். அதிலும் இரால் மீன் ரெம்பவும் ருசியானது. ஆகவே அரசாங்கமே சிறப்பான முறையில் அந்த இரால் மீனை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் கூட, இரால் மீன்களை வளர்ப்பதற்கு வேறு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, அது சம்பந்தமான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.